## நாவலப்பிடிய நகர சபை - 2022

----------------------------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

நாவலப்பிடிய நகர சபையின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை, அத்திகதியில் முடிவடைந்த வருமானச் செலவினக் கணக்கு, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கமளித்தல் தகவல்களின் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் நகர சபைக் கட்டளைச் சட்டத்தின் (255 ஆம் அதிகாரம்) 181 (I) ஆம் உபபிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காண்பிக்கப்பட்டுள்ளன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களிலிருந்தான தாக்கங்களைத் தவிர்த்து, நிதிக் கூற்றுக்களிலிருந்து 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நாவலப்பிடிய நகர சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப் பாய்ச்சல் பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டு நடைமுறைகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் தொடர்பான ஆளுகை தரபபினரின் பொறுப்புக்கள்

இந் நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு நடைமுறைகளுக்கு அமைவாக தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

நகர சபையின் நிதி அறிக்கையிடல் நடைமுறை சம்பந்தமான பொறுப்பு ஆளுகைத் தரப்பினர்களால் ஏற்றுக் கொள்ளப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) உப பிரிவின் பிரகாரம் நகர சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் சொந்த வருமானங்கள், செலவுகள், சொத்துக்கள், பொறுப்புக்கள் என்பன தொடர்பாக முறையான ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

1.4 **கணக்காய்வு விடயப் பரப்பு (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்)**

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்றவை என்பதற்கு நியாயமான உறுதிப்பாட்டை வழங்குவதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையை வழங்குவதும் எனது குறிக்கோளாகும். நியாயமான உறுதிப்பாடானது உயர் மட்டத்திலான ஒரு உறுதிப்பாடாகக் காணப்படுகின்ற போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எவ்வேளையிலும் பொருண்மையான பிறழ் கூற்றுக்களை வெளிப்படுத்தும் என்பதற்கான ஒரு உத்தரவாதமாக இருக்கமாட்டாது. மோசடிகள் மற்றும் தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கத்தை ஏற்படுத்துவதன் காரணமாக பொருண்மையான பிறழ்கூற்றுக்கள் ஏற்படக்கூடியதுடன் இந்நிதிக் கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துபவர்களால் எடுக்கப்படுகின்ற பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கவனித்தல் வேண்டும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக என்னால் தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாகக் காட்டுவதன் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்ற தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறுகின்ற தாக்கங்கள் பாரியதாக இருப்பதானது தவறான கூட்டிணைவால், போலி ஆவணங்களைத் தயாரிப்பதனால், வேண்டுமென்றே விட்டுவிடுவதனால், பிழையாகக் காட்டுவதனால் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் மோசடிகள் ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கமல்லாதிருந்தும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுகள் மீதான அறிவு பெற்றுக் கொள்ளப்பட்டது.

- பயன்படுத்திய கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தத்தன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை மற்றும் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புகளின் வெளிப்படுத்தல்கள் மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிதிக் கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களுக்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் நிகழ்வுகள் பிரதான உள்ளக கட்டுப்பாட்டு மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளது எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது நகர சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன்

முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது நகர சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க நகர சபை செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

## 1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் கீழே குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகள் தொடர்பாக விசேட ஏற்பாடுகள் உள்ளடக்குகின்றன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் நகர சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருக்கின்றன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ)(iv) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

## 1.6 நிதிக்கூற்றுக்களை தயாரிப்பது தொடர்பான கணக்காயவு அவதானிப்புக்கள்

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டிற்குரிய ரூபா 946,695 ஆன நிலையான வைப்பு வட்டி வருமானம் கணக்கீடு செய்யப்பட்டிருக்க வில்லை. | எதிர்காலங்களில் சீராக்கம் செய்வதாக | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (ஆ) | மீச் சந்தை தொகுதி நிர்மாணிக்கும் போது பெற வேண்டிய ரூபா 8,530,045 ஆன பங்குத் தொகை பதிவழிக்கப் பட்டிருக்கும் போது கடன் பட்டோராக காண்பிக்கப்பட்டிருந்தது. | சந்தை தொகுதியை நிர்மாணிக்கும் போது பெற வேண்டிய பங்குத் தொகை சபை அங்கீகாரத்தின் கீழ் பதிவழிக்கப்பட்டிருந்தது. | - மேற்படி - |

### 1.6.2 இணங்காத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது அறிக்கைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிதிக்கூற்றுக்களில் காட்டப் பட்டிருந்த பொதுக் களஞ்சிய மீதி பயன்பாட்டு ஆவணங்களுடன் ஒப்பிடும் போது ரூபா 1,125,003 ஆன வேறுபாடொன்று காணப்பட்டது. | வேறுபாட்டை கண்டுபிடித்து சீராக்கம் செய்யப்படும் | கணக்கு மீதிகள் சீராக்கப்ட வேண்டும். |

## 1.7. இணங்காமைகள்

### 1.7.1 சட்டங்கள், விதிகள் மற்றும் முகாமைத் தீர்மாணங்களுடனான இணக்கமின்மைகள்

சட்டங்கள், விதிகள், மற்றும் முகாமைத் தீர்மாணங்களுடனான இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) நகர சபை கட்டளைச் சட்டத்தின் (255 அதிகாரம்) 32 ஆம் பிரிவு | சனாதிபதியின் அல்லது ஆளுனரின் அங்கீகாரமின்றி தொலஸ்பாகே பின் மாவத்தையில் அமைந்துள்ள 1772 ஆம் இலக்க திட்ட வரைபடத்தில் குறிப்பிடப்பட்டுள்ள 01 ஆம் இலக்கம் லொட்டின் 0.61 பேர்ச் அளவிலான காணியில் நபரொருவருக்கு கட்டிடமொன்றை அமைப்பதற்கு நீண்டகால குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்ததுடன் வேர்கன் பார்க்கில் பால் விற்பனை நிலையமொன்றை நிர்மாணிப்பதற்காக 2014 ஆம் ஆண்டின் போது நாவலப்பிட்டி பல்நோக்கு கூட்டுறவுச் சங்கத்திற்கு நீண்டகால குத்தகை அடிப்படையில் வழங்கப்பட்டிருந்தது. | கௌரவ ஆளுனரின் அங்கீகாரத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. | சட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் நிதிப்பிரமாணம் | | | |
| நிதிப் பிரமாணம் 571(3) | 2016 – 2020 இற்கு இடைப்பட்ட காலப்பகுதிக்குரிய ரூபா 695,585 பெறுமதியான 15 காலாவதியான வைப்புக்கள் தீர்வுசெய்யப் பட்டிருக்கவில்லை. | விரைவில் தீர்வு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் | நிதிப் பிரமாணங்களி பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2022 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 39,334,039 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 35,422,917 ஆக இருந்தது.

### 2.2 நிதிக் கட்டுப்பாடு

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2019 சனவரி 10 ஆந் திகதி வங்கியில் வைப்புச் செய்யப்பட்ட ரூபா 736,000 தொகையை தீர்வுசெய்வதற்கு நடவடிக்கை எடுக்காமல் வங்கிக் கூற்றிலும் வங்கியிலும் காசேட்டிலும் இடம்பெற்றுள்ள வேறுபாடாக குறிப்பிடப்பட்டிருந்தது. | விரைவில் தேடிப் பார்த்து தீர்வு செய்வதற்கு நடவடிக்கை எடுப்பதாக | தீர்வு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 2.3 வருமான நிர்வாகம்

#### 2.3.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

தலைவரினால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரியதாகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| | | 2022 | | | | 2021 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வருமான மூலம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | வீதவரியும் வரியும் | 14,556,530 | 13,347,331 | 13,726,250 | 19,191,158 | 15,003,680 | 13,361,200 | 10,004,420 | 19,570,077 |
| (ii) | வாடகை | 45,855,195 | 46,718,659 | 20,711,891 | 118,103,686 | 46,438,550 | 36,873,180 | 9,588,632 | 92,096,918 |
| (iii) | அனுமதிப் பத்திரக் கட்டணங்கள் | 590,000 | 536,450 | 536,450 | - | 6,450,000 | 361,020 | 361,020 | - |
| (iv) | ஏனைய வருமானம் | 5,400,000 | 4,244,200 | 3,431,678 | 6,064,054 | 5,495,000 | 4,107,600 | 2,343,400 | 5,251,532 |
| | | 66,401,725 | 64,846,640 | 38,406,269 | 143,358,898 | 73,387,230 | 54,703,000 | 22,297,472 | 116,918,527 |

## 2.3.2 வருமானம் சேகரிப்பின் செயலாற்றல்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| **(அ)** | **வீதவரியும் வரியும்** | | |
| | மீளாய்வாண்டின் இறுதி திகதியில் உள்ளவாறு நிலுவை வீதவரி மீதி ரூபா 18,335,885 ஆக இருந்ததுடன் அலகொன்றில் ரூபா 10,000 இற்கு மேற்பட்ட நிலுவை வீதவரி காணப்பட்ட 423 அலகுகளில் ரூபா 13,330,036 ஆன வீதவரி நிலுவையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | நிலுவைத் தொகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் வருமானம் அறவிடப்பட வேண்டும். |
| **(ஆ)** | **கடை வாடகை** | | |
| (i) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் காணப்பட்ட ரூபா 109,856,200 ஆன கடை வாடகை நிலுவை மீதியொன்று காணப்பட்ட துடன் கடை வாடகை நிலுவை ரூபா 1,000,000 இற்கு மேற்ட்ட 27 கடைகளிலிருந்து ரூபா 31,252,283 அறவிடப்பட வேண்டியிருந்தது. | எதிர்ப்பு பரிசோதனைகளை நடாத்தி நிலுவை தொகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | உடன்படிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்து நிலுவைத் அறவிடப்பட வேண்டும். |
| (ii) | நாவலப்பிட்டிய 147 பொது வியாபார கடைகளின் குத்தகை வாடகை ரூபா 400 முதல் ரூபா 1,500 வரையிலான வீச்சில் மாதாந்தம் குத்தகையாளர் களிடமிருந்து அறவிடப்பட்டு வந்த போதும் குத்தகை வாடகை அறவிடப்பட்ட முறை தொடர்பான தகவல்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. | குத்தகை வாடகை அறவீடு தொடர்பாக ஆராய்ந்து விடயங்களை சமர்ப்பிப்பதாக | மதிப்பீட்டின் பிரகாரம் வாடகை அறவிடப்பட வேண்டும். |
| **(இ)** | **ஏனைய வருமானம்** | | |
| | 165 விளம்பர பதாதைகளிலிருந்து மீளாய்வாண்டில் ரூபா 1,011,849 ஆன கட்டணங்கள் அறவிடப் பட்டிருக்கவில்லை. | நிலுவையை அறவிடுவதற்கு கடிதங்களை அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நிலுவைக் கட்டணங்கள் அறவிடப்பட வேண்டும். |
| **(ஈ)** | **நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணங்கள்** | | |
| | மாகாண சபையின் பிரதான செயளலாளரிடமிருந்தும் ஏனைய அதிகாரிகளிடமிருந்தும் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு பெற வேண்டிய முத்திரைக் கட்டணங்கள் ரூபா 4,754,650 ஆக இருந்தது. | அட்டவணையின் பிரகாரம் கணக்குகளில் சீராக்கம் செய்வதாக | நீதிமன்ற தண்டப்பணத்தையும் முத்திரைக் கட்டணங்களை பெற்றுக் கொள்ள வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 சட்டத்தினால் கையளிக்கப்பட்டுள்ள செயற்பாடுகளை நிறைவேற்றுதல்

நகர சபைகள் சட்டத்தின் 4 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுதுபோக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| ஹதுன்கலவத்த மற்றும் அம்பகமுவ நீர் செயற்திட்டங்களில் மேற்கொண்ட நீர் மாதிரி பரிசோதனை அறிக்கையின் பிரகாரம் கோலிபாம் பக்டிரீயா 14 இற்கும் 184 இற்கும் இடைப்பட்ட அளவில் உள்ளடங்கியிருப்பதால் அந்நீர் குடிப்பதற்கு பொருத்தமற்ற நிலைமையில் காணப்பட்டதுடன் நகர சபைக் கட்டளைச் சட்டத்தின் (255 அதிகாரம்) 104 பிரிவின் பிரகாரம் பொது சுகாதார அதிகாரியாக சபை நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என குறிப்பிடப்பட்டிருந்த போதும் அது தொடர்பாக எவ்வித கவனத்தையும் செலுத்தாமல் குடிப்பதற்கு பொருத்தமற்ற அசுத்த நீர் பொது மக்களுக்கு வழங்கப்பட்டிருந்தது. | ஊழியர்களை ஈடுபடுத்தி பராமரிப்பு நடவடிக்கைகளையும் சுத்திகரிப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும். | சுத்தமான குடிநீர் விநியோகிக்கப்பட வேண்டும். |

### 3.2 இனங்காணபபட்ட நட்டங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2022 மே 09 ஆந் திகதி நாட்டில் இடம்பெற்ற பிரச்சினைக்குரிய நிலைமையில் கிளர்ச்சிக் கும்பல் ஒன்றினால் தாக்கப்பட்டதன் பேரில் கொஸ்வத்த சந்தியில் சபைக்குரிய கெப் வண்டிக்கு சேதம் ஏற்பட்டமை தொடர்பில் நிதிப் பிரமாணம் 104(3) இன் பிரகாரம் ஆரம்ப அறிக்கை 2022 யூலை 18 ஆந் திகதி விநியோகிக்கப்பட்டிருந்த போதும் விபத்து இடம்பெற்று 07 மாதங்கள் பூர்த்தியடைந்திருந்த போதும் நிதிப் பிரமாணம் 104(4) இன் பிரகாரம் பூரண அறிக்கையை சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | சேதத்தின் பெறுமதி இனங்காணப்பட்டு உள்ளூராட்சி மன்ற திணைக்களத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. | நட்டத்தினை இனங்கண்டு நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்த வேண்டும். |

## 3.3 முகாமைத்துவ செயற்திறனின்மை

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு பெறவேண்டிய கணக்கு மீதிகளின் மொத்தம் ரூபா 14,098,493 ஆக இருந்ததுடன் அதில் 1 இற்கும் 5 ஆண்டுகளுக்கும் இடைப்பட்ட காலத்திற்குரிய மீதிகளின் மொத்தம் ரூபா 9,205,548 மற்றும் 5 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக இருந்து வரும் மொத்தம் ரூபா 3,094,193 ஆக இருந்தது. | நிலுவை தொகையை அறவிட்டு அறிக்கையிடுவதாக | பெறவேண்டிய மீதிகள் அறவிடப்பட வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு செலுத்த வேண்டிய மீதிகளின் கூட்டு:த்தொகை ரூபா 11,333,498 ஆக இருந்ததுடன் அதில் 1 இற்கும் 5 ஆண்டுகளுக்கும் இடைப்பட்ட காலப்பகுரிய மீதிகளின் மொத்தம் ரூபா 1,370,864 ஆக இருந்ததுடன் மற்றும் 5 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக காணப்படும் மொத்தம் ரூபா 556,379 ஆன மீதிகள் தீர்வு செய்யப்பட்டிருக்கவில்லை. | ஆராய்ந்து பார்த்து தீர்வு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | செலுத்த வேண்டிய மீதிகள் தீர்வு செய்யப்பட வேண்டும். |
| (இ) | 2008 ஆம் ஆண்டில் சபையில் காணப்பட்ட நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபைக்கு கையளிக்கப்பட்டிருந்த போதிலும் அத்திகதியில் காணப்பட்ட ரூபா 707,373 ஆன நிலுவை கட்டணங்கள் அறவிடப்பட்டிருக்க வில்லை. | அறவிடப்படாத மீதிகளை பதிவழிப்பதற்கும் ஏனைய நிலுவை மீதிகளை அறவிடுவதற்கும் நடவடிக்கை எடுப்பதாக | நிலுவை கட்டணங்களை அறவிட வேண்டும். |
| (ஈ) | புகையிரத பாதுகாப்பு காணிக்கானக குத்தகை கட்ணங்கள் ரூபா 775,004 தொகை 2020 ஆம் ஆண்டு முதல் காணப்பட்டு வருவதுடன் தீர்வு செ்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | உடன்படிக்கையின் பிரதியைப் பெற்று கொடுப்பனவு செயற்பாடுகளை மேற்கொள்ள நடவடிக்கை எடுப்பதாக | உரித்து கை யேற்கப்பட வேண்டும். |

### 3.4 விளைவற்ற குறைப் பயன்பாட்டிலான ஆதனங்கள் , பொறிகள் மற்றும் உபகரணங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் இறுதி திகதியில் காணப்பட்ட மொத்தம் ரூபா 1,390,750 ஆன 09 வாகனங்கள் 01 முதல் 12 ஆண்டுகள் வரையான காலப் பகுதியில் விளைவற்றும் குறைப் பயன்பாட்டுடனும் காணப்பட்டன. | திருத்தம் செய்யப்படவோ அல்லது ஏலவிற்பனை செய்ய நடவடிக்கை எடுக்கப்படும். | திருத்தம் செய்வதற்கு அல்லது ஏலத்தில் விற்பனை செய்ய நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 3.5 சொத்துக்கள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) சபை பயன்படுத்தும் கெப் வண்டியின் உரித்து கையேற்கப்பட்டிருக்கவில்லை | கையேற்பதற்காக தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றது. | உரித்தைக் கையேற்க வேண்டும். |
| (ஆ) ரூபா 252,607,552 செலவில் நிர்மாணிக்கப்பட்ட மீச் சந்தை கடைத்தொகுதி அமைந்துள்ள காணி ரூபா 21,950,873 தொகை செலவு செய்து நிர்மாணிக்கப்பட்ட இம்புல்பிட்டிய சுற்றாடல் பாதுகாப்பு நிலையம் அமைந்துள்ள காணி என்பவற்றின் உரித்தினை கையேற்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இக் காணியை கையேற்பதற்காக நடவடிக்கைகள் எடுக்கப்படுவதாக | - மேற்படி - |

### 3.6 செயற்திட்டங்கள், பணிகள் அல்லது மூலதன செயற்திட்ட தாமதங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| பவ்வாகம மயானத்தை சுற்றி வேலியொன்றை நிர்மாணிப்பதற்காக 2017 ஆம் ஆண்டின் போது ரூபா 500,000 ஆன உடன்படிக்கையொன்றுக்கு நிர்மாணம் கையளிக்கப்பட்டு 2018 ஏப்ரல் 03 ஆந் திகதி கொடுப்பனவு செய்து ரூபா 325,089 ஆன பகுதியொன்று மாத்திரம் பூர்த்தி செய்து குறித்த செயற்திட்டத்தின் வேலைகள் இடை நிறுத்தப்பட்டிருந்தன. | உடன்படிக்கையின் பிரகாரம் செயற்திட்டத்தின் எஞ்சிய வேலைகளை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுப்பதாக | வேலைகளைப் பூர்த்தி செய்து பயன்படுத்தப்பட வேண்டும். |

### 3.7 மனித வள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| **(அ) ஊழியர் வெற்றிடங்களும் மிகையும்** | | |
| அங்கீகரிக்கப்பட்ட பதவியணி மற்றும் உள்ளவாறான பதவியணியுடன் ஒப்பிடும் போது 08 பதவிகளில் 42 வெற்றிடங்களும் 03 பதவிகளில் 12 மிகைகளும் காணப்பட்டன. இதில் பொதுச் சுகாதார பரிசோதகர் மற்றும் வருமான பரிசோதகர் பதவிகளுக்காக காணப்படும் வெற்றிடங்கள் காரணமாக சபையின் நடவடிக்கைகளுக்கு தடைகள் காணப்பட்டன. | மாதாந்த பதவியணியினர் தகவல்கள் மூலம் வெற்றிடங்கள் தொடர்பாக அறிக்கையிடப்பட்டுள்ளது. | வெற்றிடங்கள் நிரப்பப்பட வேண்டும். |
| **(ஆ) ஊழியர் கடன்** | | |
| 2018 - 2021 காலப்பகுதியில் ஓய்வுபெற்ற, வேலையில் இடை நிறுத்தம் செய்யப்பட்ட சேவையை விட்டுச்சென்ற மற்றும் மரணித்த 40 உத்தியோகத்தர்களிடமிருந்து ரூபா 1,562,289 ஆன கடன் மீதியொன்று அறவிடப்பட்டிருக்க வில்லை. | குறித்த தரப்பினரிடமிருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | கடன்கள் அறவிடப்பட வேண்டும் |

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வான்டிற்காக தயாரிக்கப்பட்டிருந்த பாதீட்டில் காண்பிக்கப்படும் பிரகாரம் மதிப்பிடப்பட்ட வருமானங்கள் மற்றும் செலவினங்களுடன் உள்ளவாறான வருமானங்கள் மற்றும் செலவினங்களுக்கு இடையே ஒப்பிடும் போது 21 வருமான விடயங்களில் 34 சதவீதம் முதல் 100 சதவீதம் வரையிலும் 68 செலவின விடயங்களில் 50 சதவீதம் முதல் 100 சதவீதம் வரையான விலகல்கள் அவதானிக்கப்பட்டதால் பாதீடு ஆக்கபூர்வமான முகாமைத்துவ கட்டுப்பாட்டுக் கருவியொன்றாக பயன்படுத்தப்பட்டு இருக்கவில்லை | எதிர்வரும் காலங்களில் சீராக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | கவனமாகவும் தேவைப்பாட்டினை கருத்திற் கொண்டு பாதீடு தயாரிக்கப்பட வேண்டும். |

## 4.2 நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| சபையினால் நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் மற்றும் இலக்குகள் இனங் காணப்பட்டிருக்கவில்லை. | எதிர்வரும் காலங்களில் நடவடிக்கை எடுப்பதாக | நோக்கங்கள் மற்றும் இலக்குகள் இனங்காணப்பட்டு செயற்படுத்தப்படல் வேண்டும். |